# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) • திருவள்ளுவர் ஆண்டு 2050 • செப்டம்பர் 21, 2019 Weekly E-paper • SEPTEMBER 21, 2019




# யானை செத்துவிட்டது

## அறிவிக்க ஆள் இல்லை

சுப. வீரபாண்டியன்



### பறிபோகும் கல்வி உரிமை

பைந்தமிழ் பாபு

### ஆரியயரைப் புறம்கண்ட கீழடி

தலையங்கம்

### தமிழகமெங்கும் பெரியார் பிறந்தநாளில் பேரவையினர் மாலை அணிவிப்பு



# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2050 ● செப்டம்பர் 21, 2019 Weekly E-paper ● SEPTEMBER 21, 2019


# யானை செத்துவிட்டது அறிவிக்க ஆள் இல்லை!

● சுப. வீரபாண்டியன்



ஆங்கில ஊடகம் 'தி பிரிண்ட்' இந்தியப் பொருளாதார நிலையை விளக்க ஒரு கதையை வெளியிட்டுள்ளது.

ஒரு மன்னர் தன் யானையிடம் மிகுந்த அன்பு கொண்டவராக இருந்தார். ஒரு நாள் அந்த யானை கடுமையான நோய்க்கு ஆட்பட்டது. இன்றோ நாளையோ இறந்துவிடும் என்னும் நிலை. மன்னருக்குத் தாள முடியாத வருத்தம். யானை இறந்த செய்தியை யார் என்னிடம் வந்து சொல்கிறானோ அவன் தலையை எடுத்துவிடப் போகிறேன் என்று அருகில் இருந்தவர்களிடம் கூறியுள்ளார். செய்தி எல்லா இடத்திற்கும் பரவி விட்டது.

அடுத்த நாள் யானை இறந்துவிட்டது. மன்னரிடம் போய்ச் சொல்ல யாருக்கும் துணிவு இல்லை. சொல்லாமல் இருக்கவும் முடியாது. இறுதியில், யானைப்பாகன் மன்னரைச் சந்தித்து, "மன்னர் மன்னரே, நம் யானை இன்று காலையிலிருந்து உணவு உட்கொள்ளவில்லை, அசையவில்லை, மூச்சு விடவும் இல்லை" என்றார். "அப்படியானால் யானை இறந்துபோய் விட்டதா?" என்று மன்னர் சினத்துடன் கேட்டார். "அது எனக்குத் தெரியாது. நீங்கள்தான் வந்து பார்த்து எல்லோருக்கும் செய்தி சொல்ல வேண்டும்" என்றார் யானைப்பாகன்.

இப்படித்தான் இருக்கிறது இன்றைய இந்தியப் பொருளாதாரத்தின் நிலை. வீழ்ச்சியை நோக்கி விரைந்து செல்லும் நம் பொருளாதாரம் ஏறத்தாழச் செத்துவிட்டது என்று பொருளியல் வல்லுநர்கள் கூறுகின்றனர். ஆனால் அதனை அரசு மூடி மறைக்கின்றது. வேறு வேறு செய்திகளைச் சொல்லி உண்மையைத் திசை திருப்புகிறது.

குறிப்பாக, ஆட்டோமொபைல் துறையும், கட்டுமானத் துறையும் பெரும் வீழ்ச்சியைச் சந்தித்துள்ளன என்பது வெளிப்படையாகத் தெரிகிறது. அதுபற்றிக் கேட்டால், முத்தலாக்கைத் தடை செய்துவிட்டோம் என்கின்றனர். மொத்தப் பொருளியல் உற்பத்தி 5% அளவிற்குக் குறைந்தது ஏன் என்று கேட்டால், காஷ்மீரைச் சொர்க்க பூமியாக்கப் போகிறோம் என்கின்றனர். நாளைய இந்தியாவின் பொருளாதாரம் பற்றி மக்கள் கவலையுடன் கேள்வி எழுப்பினால், அமெரிக்காவில் ஹவுடி மோடி நிகழ்ச்சி சிறப்பாக நடந்தது என்று சொல்கின்றனர். எல்லாவற்றையும் மீறிக் கேள்வி கேட்டால். 'இவர்களெல்லாம் ஆன்டி இந்தியன்' என்று சொல்லிக் கதையை முடித்து விடுகின்றனர்.

எந்த நிதி நெருக்கடியும் இல்லை என்று சொல்லும் மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் இப்போது பல வரிச் சலுகைகளை அறிவித்துள்ளார். எந்த நெருக்கடியும் இல்லாதபோது வரியில் சலுகைகளை ஏன் அறிவிக்க வேண்டும்? ரிசர்வ் வங்கியிலிருந்து 1,76,000 கோடியை ஏன் பெறவேண்டும்? வங்கிகளை ஏன் இணைக்க வேண்டும்?

எந்தக் கேள்விக்கும் விடை இல்லை. யானை செத்துவிட்டது. அறிவிக்கத்தான் ஆள் இல்லை! ●


## கோவையில் அறிவுத் தேடல் 4

29.09.2019 ஞாயிறு மாலை 6.30 மணி

ஹோட்டல் அக்சயம், நவ இந்தியா, கோவை

தலைமை : தோழர் மா. உமாபதி

வரவேற்புரை : தோழர் சிற்பி செல்வராஜ்

முன்னிலை : தோழர் வெண்மணி, தலைவர், திராவிடத் தமிழர் கட்சி

தொடக்கவுரை : பேராசிரியர் முனைவர் ப. கற்பகவள்ளி

கருத்துரை : தோழர் சுப. வீரபாண்டியன்

பொருள்: லத்தீன் அமெரிக்க நாடுகள்

வாருங்கள் தோழர்களே, வாருங்கள் மாணவர்களே!

சேர்ந்து படிப்போம்!

அன்புடன் அழைக்கும்

திராவிட இயக்கத் தமிழர் பேரவை

# இதுவா? அதுவா?

# பறிபோகும் கல்வி உரிமை

வைந்தமிழ் பாபு

இன்று கல்வி என்பது ஒவ்வொரு தனி மனிதனுடைய அடிப்படை உரிமையாகும். ஆனால் நூற்றாண்டுகளுக்கு முன்பு வரை கல்வி என்பது அடிப்படை உரிமையாக ஏற்கப்படவில்லை. பிறப்பின் அடிப்படையில் ஒரு குறிப்பிட்ட வகுப்பினரின் வட்டத்திற்குள் மட்டுமே கல்வி ஒடுங்கியிருந்தது. 1920ல் நீதிக் கட்சி ஆட்சியில் தான் 'சென்னை மாகாண கட்டாய ஆரம்பக் கல்விச் சட்டம்' உருவாக்கப்பட்டு அமல்படுத்தப்பட்டது. அந்தச் சட்டம்தான் சாதி மதத்திற்கு அப்பாற்பட்டு, ஆண், பெண் இருபாலருக்கும் கல்வி கற்பதற்கான சமவாய்ப்பை உறுதி செய்தது.

படிக்க இயலாதவனைப் படிக்க வைக்கத்தான் பள்ளிக்கூடங்களும் அதன் தொடர்ச்சியாக மதிய உணவுத் திட்டம், கல்வி உதவித் தொகை, இலவசக் கல்வி, இலவசச் சீருடை, இலவச பஸ் பாஸ், மிதிவண்டி, எனப் பல்வேறு சமூக நலத்திட்டங்களும் திராவிட இயக்கங்களின் ஆட்சியில் நடைமுறைப்படுத்தப்பட்டன.

மத்திய பாஜக அரசு அறிவித்துள்ள, கல்வி வளர்ச்சிக்கு ஒருவகையிலும் உதவாத மாறாக இருக்கிற கல்வி நிலையங்களையும் மூடுவதற்கே வழி வகுக்கிற. மாநிலத்தின் கல்வி உரிமையை மறுக்கிற 'தேசியக் கல்விக் கொள்கை' யை அப்படியே ஏற்றுக் கொண்டு ஆர்எஸ்எஸ் சின் கைப்பாவையாக செயல்பட்டுக் கொண்டிருக்கும் அதிமுக அரசு, தமிழக மாணவர்களின் கல்வி உரிமையை பறிக்கும் கொடுமையை அரங்கேற்றத் துடிக்கிறது.

பிளஸ் 1 மற்றும் பிளஸ் 2 தேர்வு முறைகளில் மாற்றம் கொண்டுவரத் தமிழகப் பள்ளிக் கல்வித்துறை, மாநில அரசுக்குப் பரிந்துரை ஒன்றை அனுப்பியுள்ளது. இந்தப் பரிந்துரையின் பல அம்சங்கள் பேராபத்தைக் கொண்டுள்ளன.

குறிப்பாக, பள்ளி கல்வித்துறை பிளஸ் 1 மற்றும் பிளஸ் 2 வகுப்புகளில் 600 மதிப்பெண்களுக்குப் பதிலாக 500 மதிப்பெண்களுக்கு தேர்வு எழுதும் வகையில் அரசாணை ஒன்றை வெளியிட்டுள்ளது.

இவ்வரசாணையில், பொறியியல் படிக்க விரும்பும் மாணவர்கள் இயற்பியல் , வேதியியல் , கணிதப் பாடங்களை மட்டும் தேர்வு செய்து கொள்ளலாம் என்றும் , மருத்துவம் படிக்க விரும்பும் மாணவர்கள் வேதியல் , உயிரியல் பாடங்களை மட்டும் தேர்வு செய்து கொள்ளலாம் என்றும் , இந்தப் புதிய நடைமுறை வரும் 2020-2021 ஆம் கல்வியாண்டு முதல் அமல்படுத்தப்படும் என்றும் உள்ளது.

இதற்கான காரணமாகத் தமிழக அரசு கூறுவது: மேம்படுத்தப்பட்ட பாடத்திட்டம், மாணவர்கள் உயர்கல்வி மற்றும் வேலைவாய்ப்பிற்கு வழி செய்தல், மாணவர்களின் மன அழுத்தத்தைக் குறைத்தல் என்பன. மேலோட்டமாகப் பார்த்தால் ஏதோ மாணவர் நலன் என்பது போலத் தோன்றும். ஆனால் உண்மையில் இது மாணவச் சமுதாயத்தின் கல்வி கற்கும் உரிமையைப் பறிக்கும் செயலே.

தற்போது நடைமுறையில் உள்ள பாடத்திட்டத்தில் மருத்துவம் மற்றும் பொறியியல் இரண்டுக்கும் சேர்த்து படிக்கக்கூடிய வகையில் தமிழ், ஆங்கிலம், இயற்பியல், வேதியியல், உயிரியல், கணிதம் என 6 பாடங்கள் இருந்து வருகின்றன. இந்தப் பிரிவைச் தேர்வு செய்யும் நம் பிள்ளைகள் பொறியியல் மற்றும் மருத்துவம் என இரண்டு துறைகளுக்கும் செல்லும் வாய்ப்பு இருந்தது.

ஆனால் தற்போது, இந்தப் பிரிவிலிருந்து கணிதப்பாடம் நீக்கப்பட்டு தமிழ், ஆங்கிலம், இயற்பியல், வேதியியல், உயிரியல் ஆகிய 5 பாடங்கள் மட்டுமே இருக்கும். மருத்துவப் படிப்பிற்கு மட்டும் செல்லக்கூடிய மாணவர்கள் இந்த பிரிவையும்,



அதே போல் பொறியியல் துறை சார்ந்த படிப்புகளுக்குச் செல்லக்கூடிய மாணவர்கள் தமிழ், ஆங்கிலம், இயற்பியல், வேதியியல், கணிதம் என 5 பாடங்களைக் கொண்ட பிரிவையும், மட்டுமே படிக்க முடியும் .

இது வரை நம் பிள்ளைகளுக்கு இருந்த இரட்டை வாய்ப்புகளில் ஒன்றை பிளஸ் 1 என்று வரும் போதே பறிக்கும் சமூக அநீதியே அதிமுக அரசு அறிவித்துள்ள இந்தப் புதிய திட்டம்.

மாணவர்களின் சிந்தனையையும், படைப்பாற்றலையும் ஊக்குவித்து, அவர்களின் வளர்ச்சிக்குத் துணை நிற்க வேண்டியது, மாநில வளர்ச்சியில் அக்கறை உள்ளஅரசின் கடமையாகும். அதற்கு மாறாக தம் மக்களின் உரிமையையும் வளர்ச்சியையும் தடுப்பதா மக்களுக்கான அரசு?

எப்படிப்பட்ட தரமான கல்வியை நம் பிள்ளைகளுக்கு அளிக்க வேண்டும் என்பதுதான் ஒரு அரசின் நோக்கமாக இருக்க வேண்டுமே தவிர எப்படி அவர்களை வடிகட்ட வேண்டும் என்பதாக இருக்கக் கூடாது. ●

## கலைஞரின் நெஞ்சுக்கு நீதி

தொடர் சொற்பொழிவு 12

26.09.2019, வியாழன்
மாலை 6.30 மணி
சென்னை,
பெரியார் திடல்

உரையாளர் :
தோழர்
சுப.வீரபாண்டியன்

பெரியார் நூலக வாசகர் வட்டம்,
சென்னை-7

அனைவரும் வருக!



ஆசிரியர்
சுப.வீரபாண்டியன்

இணையதளம்
www.keetru.com
www.karunchattaibooks.com

பொறுப்பாசிரியர்
எழில். இளங்கோவன்

மின் அஞ்சல்
karunchattai@gmail.com

டுவிட்டர்
suba_vee

ஆசிரியர் குழு
உதயகுமார்
வெற்றிச்செல்வன்
ஸ்ரீவித்யா

தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை - 600 024

வெளியீடு:
திராவிட இயக்கத் தமிழர் பேரவை

தொலைபேசி: 044-2472 6408

## பெரியார் பிறந்தநாளில் உடற்கொடை



17.9.2019 தந்தை பெரியார் பிறந்த நாளன்று சுப.வீரபாண்டியன், வசந்தா, முத்தையா குமரன், எட்வின், நர்மதா, சாந்தசீலன், இளமாறன், உமா, அருணாச்சலம் ஆகியோர் சென்னை ஓமந்தூரார் அரசு மருத்துவமனைக் கல்லூரிக்குத் தங்கள் உடற்கொடை உறுதியை, நிரப்பப்பட்ட படிவங்களோடு மருத்துவர் மனிஷா அவர்களிடம் வழங்கினர்.

## புதுவையில் நூல் அறிமுகம்




20.9.2019 அன்று, புதுவையில், கவிஞர் பெருந்தேவன் எழுதியுள்ள ‘திருவள்ளுவருக்குப் பின் அரசியல் அறம்’ என்னும் நூலை, முனைவர் செல்லப்பெருமாள் தலைமையில், பேராசிரியர் குழந்தை வேலன் முன்னிலையில் தோழர் சுப.வீரபாண்டியன் அறிமுகம் செய்து உரையாற்றினார்.

## திருச்சியில் பெண் வழக்கறிஞர்கள் கருத்தரங்கம்



21.9.2019 அன்று, திருச்சியில், முற்போக்கு பெண் வழக்கறிஞர்கள் சங்கம் நடத்திய பெரியார் பிறந்தநாள் விழாக் கருத்தரங்கில் தோழர்கள் கொளத்தூர் மணி, சுப.வீரபாண்டியன் ஆகியோர் சிறப்புரை ஆற்றினர். வழக்கறிஞர் பானுமதி தலைமையேற்க, மருந்தியல் கல்லூரி முதல்வர் செந்தாமரை, வழக்கறிஞர்கள் தமயந்தி, அங்கயற்கண்ணி ஆகியோர் பங்கேற்றனர்.

தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!

# கருஞ்சட்டைத் தமிழர்

## ஆரியரைப் புறம்கண்ட கீழடி

ஆப்கானிஸ்தான் தொடங்கி, தெற்கே குமரி வரையும் பரந்து வாழ்ந்தவர்கள் தமிழர்கள், திராவிடர்கள் என்று சான்றுகளுடன் நிறுவுகிறார் புரட்சியாளர் அம்பேத்கர்.

கி.மு.1500ஆம் ஆண்டுகளில் இந்தியாவிற்குள் நுழைந்த ஆரியர்கள் சிந்து சமவெளி நாகரிகத்தைச் சொந்தம் கொண்டாடப் பார்த்தார்கள். ஆனால், அவர்கள் வருவதற்கு முன்பே கி.மு. 3,000-2,500 காலங்களில் இந்நாகரிகம் மிக உச்சத்தில் இருந்தது. இதுகுறித்த டி.என்.ஏ ஆய்வு இந்நாகரிகம் திராவிடர்களுக்கு உரியது என்பதை மெய்ப்பித்தது.

சிந்துவெளியில் கிடைத்த காளைச் சின்னத்தைச் சிவனின் வாகனம் என்றனர் ஆரியர்கள். அது சிவன் வாகனம் இல்லை, மாறாக இனக்குழுவின் அடையாளம் என்பது வரலாறு.

இப்பொழுது வைகைக் கரையை ஒட்டிக் கீழடி அகழாய்வு உலகையே வியக்க வைக்கிறது.

தமிழ் மொழியின் முதல் எழுத்து வடிவம் ‘தமிழி’. கீழடியில் கிடைத்த சுடுமண் பாண்ட ஓடுகளில் இந்த தமிழி வரிவடிவத்தில் ‘ஆதன்’, ‘குபிரன் ஆதன்’ போன்ற பெயர்கள் இருப்பதை பார்க்கிறோம்.

இதன் காலம் கி.மு. 6ஆம் நூற்றாண்டு என்று தொல்லியல் விஞ்ஞான ஆய்வுகள் தெளிவுபடுத்துகின்றன.

அந்தக் காலத்திலேயே எழுத்து வடிவம் கொண்டவர்கள் தமிழர்கள் என்பதனால், இவர்களின் கல்வி அறிவு தொல் பழங்காலத்திலேயே மேம்பட்டிருந்தது என்பதையும் அறிய முடிகிறது.

அனேகமாக இது இடைச்சங்கத்தின் காலமாக இருக்க வாய்ப்புண்டு.

பானைகள், தக்களிகள், எலும்பு மற்றும் தந்தத்தால் ஆன வரைகோல், தந்தத்தால் ஆன சீப்பு, எழுத்தாணிகள், அரவைக்கல், குடுவை, தங்கம்-பவழம்-மணிகளால் ஆன வளையல்கள், தோடுகள், பிற அணிகலன்கள், சுட்ட செங்கற்களால் ஆன நேர்த்தியான கட்டிடச் சிதைவுகள், நீர்க் கால்வாய்கள் எனப் பல நூற்றுக்கணக்கான பண்டைய தமிழ் மக்களின் பொருள்கள் இன்னமும் கிடைத்துக் கொண்டே இருக்கின்றன.

ஒரு முக்கியமான செய்தியைக் கவனிக்க வேண்டும். சிந்து சமவெளியில் கிடைத்த யானை உருவத்தைச் சிவன் வாகனம் என்று சொன்ன பார்ப்பனர்களுக்கு, வைகைக் கீழடியில் அப்படி ஒரு மதம் சார்ந்த, மத அடையாளத்தில் எந்த ஒரு வாகனமும் கிடைக்கவில்லை.

கீழடி ஆய்வில் சமஸ்கிருதம் என்ற ஒரு மொழியின் அடையாளமே இங்கு கிடைக்கவில்லை.

கிரேக்கம்-சீனம் போன்ற தொலைதூர நாடுகளுடன் அறிவு சார்ந்தும், வணிகம் சார்ந்தும் பல சான்றுகள் கிடைத்துள்ளன.

உலகின் முதல் நாகரிகம் கொண்டவர்கள் தொல் பழங்காலத்திலேயே மதம் சாராத படித்த பகுத்தறிவாளர்களாகச் செழித்தோங்கியவர்கள் தமிழர்கள், திராவிடர்கள் என்பதை உறுதி செய்கிறது கீழடி அகழாய்வு.

# தமிழகமெங்கும்
# பெரியார் பிறந்தநாளில் பேரவையினர் மாலை அணிவிப்பு

மதுரை



வேடசந்தூர்



சூலூர்



பொன்னேரி



அம்பத்தூர்



சேலம்



திண்டுக்கல்




பல்லடம்



பாளை பொன்னாக்குடி



ஈரோடு



Published By Dravida Iyyakka Tamilar Peravai. . Editor Suba. Veerapandian,